இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23.09.2026

# பட்டினப்பாக்கம் மீனவர் எதிர்ப்பு!

உருப்படியாகச் செய்ய வேண்டிய எதையும் முதலமைச்சர் விஜய் செய்ய வில்லை. ஒரு புதிய ஆட்சி வந்தால், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும். அதைச் செய்யவில்லை. அறிவிக்கப் பட்ட ஓரிரு திட்டங்களும் அரைகுறையாகச் செய்து தரப்பட்டுள்ளன. அல்லது கடந்த ஆட்சி செய்த திட்டங்களைத் தொடர வேண்டும். அதையும் செய்ய வில்லை விஜய். பல திட்டங்களை முடக்கிவிட்டார். பல திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி பெயரை மாற்றிவிட்டார். இதுதான் விஜய் செய்திருப்பது.

**அவருக்கோ அவரது அமைச்சர்களுக்கோ கனவுகள் இல்லை. சிந்தனைத் திறன் இல்லை. தொலை நோக்குப் பார்வை இல்லை. மொத்தத்தில் ஆட்சி அதிகாரத்தை வைத்து என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் கெட்ட எண்ணங்கள் மட்டும் நிறைய இருக்கின்றன. அவதூறுகள் மூலமாக ஆட்சி நடத்துவது போலக் காட்டிக் கொள்ள நினைக்கிறார். தி.மு.க. மீது பழிபோட்டு தனது ஆட்சியை நகர்த்தப் பார்க்கிறார்.**

ஊரான் வீட்டு நெய்யில் தனக்கு ஸ்வீட் செய்து கொண்டு இருக்கிறார். நடிகர் அஜித்குமாரின் கார் ரேஸ் தொடங்கி வைக்க சொந்தச் செலவில் போகவேண்டியவர் அரசாங்க காசில் லண்டன் சென்று வந்துள்ளார். தலைமைச் செயலகத்தில் காலம் காலமாக இதுவரை ஆண்ட அனைத்து முதலமைச்சர்களும் இருந்த அறையை, நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாற்றி 6 கோடி ரூபாயைச் செலவு செய்தார். மேட்டூர் அணைத் தண்ணீரைத் திறந்து வைக்க சேலம் சென்ற ஒரு மணி நேரத்துக்கு 5 கோடி ரூபாய் பாதுகாப்புச் செலவாம். இத்தகைய சூழலில் 1200 கோடி ரூபாய் மதிப்பில் புதிய தலைமைச் செயலகம் கட்டப் போகிறாராம்.

**இந்திய நாடாளுமன்றம் கட்டவே 900 கோடி ரூபாய் தான் செலவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் 1200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்டப் போகிறார்களாம். ரூ.6 கோடியில் தனக்கு அறை கட்டியதிலேயே பல்வேறு முறைகேடுகள் நடந்தன. ரூ.1200 கோடியில் கட்டும்போது ஆயிரக்கணக்கான முறைகேடுகள் நடக்கத்தான் போகிறது.**

தலைமைச் செயலகம் கட்டுவதற்காகத் தேர்வு செய்துள்ள பட்டினப்பாக்கம் என்பது மீனவர்கள் காலம் காலமாக வாழும் பூமி ஆகும். பட்டினப்பாக்கத்தில் புதிதாக தலைமைச் செயலகம் கட்ட உள்ள பகுதிக்கு தெற்கில் முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம் ஆகிய மீனவ கிராமங்கள் உள்ளன. வடக்குப் பகுதியில் ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டுமீங் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் ஆக மொத்தம் 12 குடியிருப்புப் பகுதிகள் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளாகவே உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவ மக்கள்.

இப்பகுதியில் தலைமைச் செயலகம் அமைக்கக் கூடாது என்று முள்ளிக்குப்பம் மீனவர்கள் பஞ்சாயத்து சபை கூடி கடுமையான எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். விஜய் அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையாக இவர்கள் போராடி வருகிறார்கள். 'சுறா படத்தில் மீனவராக நடித்த விஜய், நிஜத்தில் எங்களை ஏமாற்றி விட்டார்' என்று கொந்தளிக்கிறார்கள்.

முள்ளிக்குப்பம் பகுதியில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய சட்டமன்றம், தலைமைச் செயலகக் கட்டட வளாகம் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும், இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கூடாது என்றும் தமிழ்நாடு நிதித் துறைச் செயலாளருக்கு கோரிக்கை மனு அளித்துள்ளார்கள்.

வரலாற்றுப் பூர்வமாக தங்களுக்கு இப்பகுதியில் வாழ்விட உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறோம் என்றும் மீனவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்பகுதியை கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கான நீண்ட காலக் குடியிருப்புப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்ற தங்களது கோரிக்கை நீண்ட காலமாக அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

**"தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டால் உருவாக்கப்படும் அதி உயர் பாதுகாப்பு வளையங்கள், போக்குவரத்துத் தடைகள், விழா நேரக் கட்டுப்பாடுகளால் பாரம்பரிய சாலையோர மீன் விற்பனை, வலை பராமரிப்பு மற்றும் அன்றாட மீன் பிடித் தொழில் முற்றிலுமாக முடங்கும் அபாயம் உள்ளது" என்றும் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.**

ஆயிரக்கணக்கான மீனவர்களின் குடும்பங்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படுவது தான் நடக்கப் போகிறது. மேலும், இது சட்டமன்றம், தலைமைச் செயலகம் கட்டப்படுவதற்கு சரியான இடமும் அல்ல.

**2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமியில் அதிகம் பாதிக்கப்பட்ட இடம் இது. சென்னையில் மட்டும் 206 பேர் மரணம் அடைந்தார்கள். சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடற்கரைப் பகுதிகளைச் சூறையாடியது அந்தச் சுனாமி. கடற்கரையோரப் பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணம் அடைந்தார்கள். இத்தகைய ஒரு கடற்கரைப் பகுதியை யாராவது தலைமைச் செயலகம் கட்டத் தேர்வு செய்வார்களா?**

இதன் மூலமாக மீனவர்களை அவர்களது வாழ்விடங்களில் இருந்து அப்புறப்படுத்த நினைக்கிறார் விஜய். அவரது பல செயல்பாடுகள் மர்மமாக இருக்கின்றன. சென்னை விமான நிலைய நிர்வாகத்தை தனியாருக்கு மாற்றக் கோரி பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் விஜய் கடிதம் எழுதி இருக்கிறார். கடந்த ஆகஸ்ட் மாதம் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தை ரகசியமாக வைத்துள்ளது இந்த அரசு.

விமான நிலையங்களை எடுத்து பராமரிக்கும் தனியார் நிறுவனங்களின் அதிபர்கள், விஜய்யை நேரில் வந்து சந்தித்துள்ளார்கள். இதற்கும் பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்து செய்ததற்கும் பின்னணி உள்ளது. விமான நிலையத்தை ரத்து செய்துவிட்டு, அந்த இடத்தை வேறு பணிகளுக்கு மடை மாற்றம் செய்ய விஜய் திட்டமிடுகிறார். அத்தகைய கெட்ட எண்ணத்தில்தான் மீனவர்களிடம் இருந்தும் நிலங்கள் பறிக்கப்பட இருக்கிறது.

பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டுவதால் மீனவ மக்களின் வாழ்வாதார உரிமைகள் பாதிக்கப்படும். அவர்களது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும். கடலோரச் சூழலியல் பாதிப்பை அடையும். காலநிலைப் பாதிப்புகளும் காலப்போக்கில் ஏற்படும். பொதுமக்களுக்கும் கடலுக்கும் கடற்கரைக்குமான உறவு பாதிக்கப்படும். 1200 கோடி ரூபாய் செலவு செய்து கட்டடம் கட்ட பாதுகாப்பான இடமும் அது அல்ல. அரசு ஊழியர்கள் அச்சமற்ற நிலையில் அங்கு பணி புரியவும் முடியாது. எனவே பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைப்பது அனைத்து வகையிலும் பாதகமான முடிவே ஆகும்.

---

'அடுத்த ஜென்மத்தில் விவசாயியாகப் பிறப்பேன்' என்று வெற்று வசனம் பேசிய முதலமைச்சர்

# முழு பயிர்க்கடன் கேட்டுப் போராடும் விவசாயிகளைச் சந்திக்க மறுப்பதா?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



**சென்னை, செப். 23-**

**அடுத்த ஜென்மத்தில் விவசாயியாக பிறப்பேன் என்று வெற்று வசனங்களை பேசிய முதலமைச்சர், முழு பயிர்க்கடன் கேட்டு போராடும் விவசாயிகளை சந்திக்க மறுப்பதா? என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்த Dummy ஆட்சியாளர்களின் விளம்பர வெறியால், சம்பா பயிரைக் காப்பாற்ற முடியுமா என்ற அச்சத்தில் டெல்டா விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

**விளம்பரத்திற்காக விவசாயிகளை வஞ்சிப்பதா?**

குறுவை சாகுபடிக்கு திறக்க வேண்டிய நேரத்தில் மேட்டூர் அணையை திறக்காமல் முதலமைச்சர் விவசாயிகளை வஞ்சித்தார்.

இந்த சூழலில், "சம்பா சாகுபடிக்கு அணையின் நீர்மட்டம் உயர்ந்த பிறகு செப்டம்பர் இறுதியில் தண்ணீர் திறந்துவிட வேண்டும்" என்று விவசாயிகள் சொன்னதை ஏற்காமல், வெற்று விளம்பரத்துக்காக செப்டம்பர் 1 ஆம் தேதியே திறந்து வைத்தார்.

தற்போது அணைக்கான நீர்வரத்து 4000 கன அடி என குறைந்து விட்ட நிலையில், அணையின் நீர் மட்டமும் 40 அடியை நோக்கி குறைந்து கொண்டு செல்கிறது.

இதனால் கடை மடை வரை தண்ணீர் சேருவதும் பயிரின் பூப்பு நேரத்தில் தண்ணீர் வருவதும் சந்தேகம் என்பதால், சம்பா சாகுபடியை திட்டமிட்டப்படி செய்ய முடியாது என்று விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

குறுவை சிறப்பு தொகுப்புக்கும் - வறட்சி நிவாரணத்தும் வித்தியாசம் புரியாமல் பேசிய முதலமைச்சர், இன்றைக்கு

@dt_next பேப்பரை படித்திருந்தால் விவசாயிகளின் இந்த அவலநிலை புரிந்து இருக்கும்.

ஆற்றுப்பாசனத்தை நம்பி சம்பா சாகுபடியில் இறங்க வேண்டாம் என்று வேளாண் வல்லுநர்கள் கூறும் அளவிற்கு நிலைமையை மோசமாக்கி வைத்துள்ளது இந்த Circus அரசாங்கம்.

அடுத்த ஜென்மத்தில் விவசாயியாக பிறப்பேன் என்று வெற்று வசனங்களை பேசிய முதலமைச்சருக்கு, முழு பயிர்க்கடன் கேட்டுப் போராடும் விவசாயி களை சந்திக்ககூட மனம் வரவில்லை.

திருச்சியில் போராடிய விவசாயிகளிடம் 5 நிமிடம் மட்டுமே அதிகார திமிரோடு பேசிவிட்டு சென்ற அமைச்சர்களை கண்டித்து அதற்கு ஒரு போராட்டம் நடத்தும் அளவில் தான் இந்த Reels வெறி ஆட்சி இருக்கிறது.

விளம்பரத்திற்காக விவசாயிகளை வஞ்சிக்காமல், வேளாண் பெருங்குடி மக்களுக்கு வறட்சி நிவாரணத்தையும், முழுப்பயிர்க்கடன் தள்ளுபடியையும் இந்த அரசு உடனே வழங்க வேண்டும்..

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

'தி.மு.கழகமே மகளிர்க்கு பாதுகாப்பு அரண்!'

# பூ வியாபாரம் செய்யும் சரோஜா சமூக வலைதளப் பதிவு!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. நேரில் சந்தித்து பாராட்டு!

சென்னை, செப்.23-

சென்னை தேனாம்பேட்டை அருகே உள்ள பகுதியைச் சார்ந்தவர் சரோஜா. இவர் அப்பகுதியில் பூ வியாபாரம் செய்து வருகிறார். சமீபத்தில் சமூக வலைதளங்களில் சரோஜா, தி.மு.க. தனக்கு செய்த நன்மைகளையும், தி.மு.க. இயக்க மகளிரும்தான் இறப்பிற்கு பின்னும் தனக்காக நிற்பார்கள் என்று உருக்கமாக பேசியிருந்தார்.



அதற்கு பதிலளித்த கனிமொழி ராஜாத்தி கருணாநிதி, சரோஜாவை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து எப்போதும் உங்களுக்காக நாங்கள் உடன் இருக்கிறோம்.

நீங்கள் பேசியதை சமூக வலைதளங்களில் பார்த்தேன். அது மிக நன்றாக இருந்தது, மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. உங்களை சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி. உங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் எங்களிடம் சொல்லுங்கள் எனக் கூறினார்.

தொடர்ந்து அவருக்காக புது சேலை வழங்கி அவரோடு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

அப்போது பேசிய சரோஜா, தி.மு.க. என்றால் எனக்கு உயிர். என் உயிர் உள்ள வரை தி.மு.க. இயக்கத்தில் தான் இருப்பேன். இது எனது கொள்கை, இதில் எந்த மாறுபாடும் எனக்கு கிடையாது எனக் கூறினார்.

---

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்:

# முதல்வருக்கே தெரியாமல் அறிவிக்கும் சூப்பர் சி.எம். யார்?

## கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சரமாரி கேள்வி!



சென்னை, செப். 23-

முதல்வரை டம்மியாக வைத்துக்கொண்டு தலைமைச் செயலகம் கட்டும் பணிகளை செய்யும் சக்தி எது? தி.மு.க. சட்டத்துறை இணைச்செயலாளர் பரந்தாமன் சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும், மதுராந்தகம் தி.மு.க. வேட்பாளருமான இ.பரந்தாமன் தமது சமூக வளைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:–

வாயை திறந்தாலே பொய் என்பதற்கு உதாரணமாக வாழும் அமைச்சரின் லேட்டஸ்ட் பொய். பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டும் முடிவை முதல்வர் விஜய் இன்னும் எடுக்கவில்லையாம். ஏமாற்றி பழகிவிட்டோம் என்பதற்காக, எதை சொன்னாலும் நம்பி ஏமாந்து விடுவார்கள் என்று மக்களை ஏளனமாக நினைப்பதா?.

எந்த இடத்தில் தலைமைச் செயலகத்தை கட்டுவது என ஆராய குழு அமைத்து, இந்தந்த இடங்களை ஆராய்ந்து சொல்லுங்கள் என இடம் தேர்வு செய்வதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருந்தால், முதல்வர் இன்னும் முடிவெடுக்க வில்லை என சொல்வதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், இடத்தை முடிவு செய்து, இத்தனை லட்சம் சதுர அடியில் கட்டிடம் கட்டுகிறோம். அதில், வருவாய்த்துறைக்கு சொந்தமான இடம் எவ்வளவு, வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான அரசு நிலம் எவ்வளவு என விரிவாக 25.55 ஏக்கர் நிலத்தில் போர்ஷோர் எஸ்டேட்டில், 1,200 கோடியில் தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று 'inprinciple approval' கொடுத்த ஓர் அரசாணை வெளியாகியுள்ளது.

இப்படி ஓர் ஆணை முதல்வருக்கு தெரியாமல் எப்படி வர முடியும் அல்லது முதல்வரை டம்மியாக வைத்துக் கொண்டு தலைமைச் செயலகத்தைக் கட்டும் பணிகளை மேற்கொள்ளும் சக்தி எது?.

எல்லா தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி மீனவர்கள் வாழ்வாதாரத்தை அழித்து, அவர்கள் வயிற்றில் அடித்து தலைமைச் செயலகம் கட்ட முதல்வருக்கு கூட தெரியாம அறிவிக்கும் அதிகாரம் உள்ள சூப்பர் சிம் யார்?. பொய் சொல்லி, மடை மாற்றி மக்களை ஏமாற்றும் போக்கை தவெக நிறுத்திக்கொள்ள வேண்டும். நேர்மையாக மக்களை எதிர்கொண்டு பதில் சொல்ல வேண்டும்.

இவ்வாறு இ.பரந்தாமன் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

---

முதல் வகுப்பு வினாத்தாள் லீக் விவகாரம்!

# த.வெ.க. அரசின் வினோதப் போக்கிற்குக் கண்டனம்!

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!



*சென்னை, செப். 23-*

*தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:*

*பள்ளிக்கல்வித்துறையின் செயல்பாடுகள் வினோதமாகவும், கல்வி வளர்ச்சிப் பாதையில் இருந்து தடம் மாறியும் செல்கிறது.*

*முதல் வகுப்பு ஆங்கில வினாத்தாள் லீக் ஆன விவகாரத்தில் கல்வித்துறை காட்டும் அதிவேக நடவடிக்கை ஆச்சரியம் அளிக்கிறது. ஆனால் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைகளில் எந்த வேகமும் இல்லை.*

*ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) பிரச்சினைக்கு தீர்வு இல்லை.*

*பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வில்லை.*

*வகுப்பறைகளில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.*

*தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வு வழங்கப்படாமல் பணி நிறைவு பெறும் அவலம் தொடர்கிறது.*

*இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு களையப்படவில்லை.*

*அறிஞர் அண்ணா காலத்தில் இருந்து வழங்கப்பட்ட ஊக்க ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.*

*தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் இல்லை.*

*நிர்வாக சீர்கேடுகளும், நீதிமன்ற வழக்குகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.*

*இவற்றில் எல்லாம் வேகம் காட்டாத கல்வித் துறை, முதல் வகுப்பு வினாத்தாள் விவகாரத்தில் மட்டும் 'ஒரே நாடு, ஒரே வினாத்தாள், ஒரே தேர்வு' என்ற ரீதியில் செயல்படுவது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*மாநிலம் முழுவதும் பொதுத் தேர்வு வினாத்தாள் தயாரிப்புக் குழு யார்? அதை அச்சடித்தது யார்? வெளியிட்டது யார்? என்பது குறித்து வெளிப்படைத்தன்மை வேண்டும்.*

*முதல் வகுப்பு குழந்தைகளுக்கு பள்ளி அளவில் நடத்த வேண்டிய தேர்வை, மாநில அளவில் பொதுத்தேர்வாக நடத்துவது ஏற்புடையதல்ல. .*

*வினாத்தாள் லீக் ஆனதற்கு ஆசிரியர்களை பதற்றத்திற்கு உள்ளாக்கி, உடனடியாக அலுவலகம் வந்து வினாத்தாளை பெற்றுச் செல்ல வேண்டும் என உத்தரவிடுவது கண்டிக்கத்தக்கது.*

*மாணவர்கள் மகிழ்ச்சியாக கற்றதை வெளிப்படுத்தும் வகையில் தேர்வு முறை இருக்க வேண்டுமே தவிர, அச்சுறுத்தும் வகையில் இருக்கக்கூடாது. வருங்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் தொடக்கக்கல்வித் துறையில் நடைபெறாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில் வலியுறுத்துகிறேன்.*

*இவ்வாறு அதில் கூறியுள்ளார்.*